# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். எஸ். தௌபீக் அவர்களால்*
*2017, பெப்புருவரி மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, சனவரி மாதம் 9 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***166 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 005054 -225 (2017/02)

**இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்)**

## இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

இதற்கு முன்னர் இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் எனும் பெயரிலான நிறுவனம் ஒன்று தொடர்பாக கவனத்திற் கொண்டு அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொடர்பு களை வினைத்திறனாக நடாத்திச் செல்லும் நோக்கில் பிணையில் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக 1982ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன்கீழ் அமுலில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கு ஏற்புடையவாறு நிறுவப்பட்டது.

இதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நிறுவனம் வெற்றிகரமான முறையில் தமது பணிகளை முன்னெடுத்துச் சென்றுள்ளதுடன் அந்நிறுவனத்தை நிறுவுவதற்கான நோக்கமான குறிக்கோள்கள் மற்றும் விடயங்கள் என்பவற்றினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றியுள்ளமையை கவனத்திற் கொண்டு பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் கூட்டிணைப்பதற்கு அந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறனதொரு கோரிக்கையினை நிறைவேற்றியுள்ளமை பொது மக்களின் நலன் கருதியாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*இலங்கை ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டத்தின் ஆரம்ப தினம் முதல் அதன் பின்னர் இது வரையில் அதிகளவு எண்ணிக்கையானோர் பட்டயம் பெற்ற இணைந்த (கூட்டிணைக்கப்பட்ட) செயலாளர்களின் சங்கத்தின் அங்கத்தவர்களாகக் காணப்படுவதுடன் (இதன் பின்னர் ICCSSL எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்ற) இதனகத்தின் பின்னர் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தில் இணைகின்ற அங்கத்தவர்கள் இணைந்த நிறுவனம் அங்கத்தவர்களாக எந்நேரமும் வெற்றித் தன்மையின் பொருட்டு இலங்கை

2-PL 005054 -225 (2017/02)

ஒருங்கிணைந்த பட்டயச் செயலாளர்களின் நிறுவனம் என்னும் பெயரில் அந்நிறுவனத்தின் போக்கினைக் கடைப்பிடித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியதுடன், (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” என்று அழைக்கப்படுகின்ற) அப்பெயரில் வழக்குத் தொடரவும் மற்றும் வழக்குத் தொடரப்படவும் கூடிய அனைத்து அதிகாரங்களும் கொண்டதாக பொது இலச்சினை ஒன்றினைப் பயன்படுத்துதல் மற்றும் இலச்சினையில் ஏதேனும் மாற்றம் கொண்டுவருவதாயின் அதன் விருப்பத்தின் பேரில் மேற் கொள்ளும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

***3***. நிறுவனத்தை (சங்கம்) நிறுவுவதற்கான (கூட்டிணைப்பதற்கான) பொது நோக்கங்கள் இங்கு வெளியிடப்படுகின்றது :-

(அ) பட்டயம்பெற்ற இணைந்த (கூட்டிணைக்கப்பட்ட) செயலாளர் பதவியின் பயன்மிக்க மற்றும் ஏற்றத்தாழ்வற்ற விருத்தி, முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் இணைந்த துறையின் இணைந்த (கூட்டிணைக்கப்பட்ட) பணிகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு;

(ஆ) அதன் அங்கத்துவர்களின் தொழில்சார் விருப்பம், தரம், உரிமை மற்றும் சலுகைகள் என்பவற்றினைக் கவனத்திற் கொண்டு பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர்களின் தொழில் தொடர்பாக பொது மக்களின் விருப்பத்தை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல்;

(இ) இலங்கையிலும் வேறு யாதேனுமொரு பிரதேசத்திலும் இருக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட தலைவர்களின் (பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர்களின்) தொழிலினை பிரதிநிதித்துவப்படுத்தல்;

(ஈ) பட்டயம்பெற்ற இணைந்த (கூட்டிணைக்கப்பட்ட) செயலாளர் பதவியுடன் தொடர்புடைய முகாமைத் துவத்தை நிருவகித்தல் மற்றும் ஏனைய கூட்டிணைக் கப்பட்ட (இணைந்த) பணிகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பொதுசன அதிகாரிகளுடன் தொடர்பினை ஏற்படுத்துதல்;

(உ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிருவகிப்பதற்காக தகைமை பெறுகின்ற பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர்கள் அதிகாமானோரை பெற்றுக்கொடுத்தலும் வசதியளித்தலும்;

(ஊ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியுடன் தொடர்புடைய முகாமைத்துவத்தை நிருவகித்தல் போன்றவற்றிற்கு பாடநெறிகளை நடாத்துதல் பரீட்சைகள் அல்லது அவ்வாறான வேறு விடயங்கள் மூலம் தொழில்சார் தகைமைகளைப் பேணிவருதலும் நிறுவுதலும்;

(எ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியுடன் தொடர்புடைய கோட்பாடுகள், சட்டம், செயல்முறை பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிருவகித்தல் உள்ளிட்ட கல்விப் பணிகளின் பக்கம் ஆர்வமூட்டல்;

(ஏ) நிறுவனத்தின் அங்கத்தவர்களுக்கான தகைமை, அங்கத்துவத்திற்கான மீளமைப்பு, தொழில்சார் நடத்தை மற்றும் அவற்றினை பாதுகாத்தல் மற்றும் பின்பற்றுதல் தொடர்பான கட்டளைகளை வழங்குதல்;

(ஐ) அமைப்பின் அங்கத்துவத்தில் இணைத்துக் கொள்வதற்காக ஒழுங்கு செய்தல், கண்காணித்தல் மற்றும் நிருவாக பணிகளை மேற்கொள்ளல், பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவிக்குரிய நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான துறைகள் தொடர்பிலான கல்வி நடவடிக்கைகள் மற்றும் செயல்முறை பயிற்சிகளை ஆரம்பித்தல், நிறுவனத்தின் அங்கத்துவத்திற்கு கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக அனுமதிக்கப்பட்ட பாடநெறிகள், தகைமை பெறுவதற்கான பரீட்சைகளை நடாத்துதல், கல்வி நடவடிக்கைகளை

தொடர்ந்தும் மேற்கொள்வதற்கும் மற்றும் செயலாற்றுகையினை விருத்தி செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய துறைகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து அவ்வாறான பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஒ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியின் முகாமைத்துவத்தின் இணைந்த நிருவாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளின் கல்வி, பயிற்சி, அபிவிருத்தி, தொழில்சார் சேவைகள் மற்றும் மானிட தொழில்நுட்ப வளங்கள் பற்றிய தீர்மானம் மற்றும் அவற்றின் தரத்தை இற்றைப்படுத்தல்;

(ஓ) நிறுவனத்திற்கு யாதேனுமொரு முறையில் பங்களிப்புச் செய்யக்கூடிய மற்றும் பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியுடன் தொடர்புடைய முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்த்தல்;

(ஔ) பொதுசன விருப்பம், இணைந்த நிறுவனங்களின் விருப்பம் மற்றும் பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவிக்கு உரிய கௌரவத்தை வழங்குதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மற்றும் வேறு யாதேனுமொரு எழுத்துமூல சட்டத்தின்கீழ் நிறுவனத்தின் பொதுக் குறிக்கோள்களை மேலும் அடைந்து கொள்வதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்குமான உரிமை நிறுவனத்திடம் காணப்படும் :-

(அ) நிறுவனத்தின் நோக்கம் மற்றும் தொழிற்பாடுகளுக்கு ஏற்றவாறு இலங்கையின் அல்லது வெளிநாடுகளின் வேறு நபர்கள், முகவர்கள், அமைப்பொன்றுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல், ஒத்துழைப்பு வழங்குதல், உதவுதல், ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளல் என்ற அடிப்படையிலான ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதல்;

(ஆ) நிறுவனத்தின் பரீட்சை பணிகள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அங்கத்துவத்தின் சார்பில் வரியொன்றினை, பங்களிப்பு ஒன்றினை அல்லது அன்பளிப்பு ஒன்றினை நிர்ணயித்தல்;

(இ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியின் முகாமைத்துவம், நிர்வாகம் ஆகிய துறைகளுக்கான வெற்றியின் நிமித்தம் அன்பளிப்புக்கள், புலமைப் பரிசில் வழங்கல், விருது வழங்கல் என்பவற்றினை ஏற்படுத்தல்;

(ஈ) பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவியில் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக செயல்முறை அறிவினைப் பெற்றுக் கொடுத்தல், விளம்பரப் பணிகள், விரிவுரைகள் என்பவற்றினை ஒழுங்கு செய்தல் மற்றும் கருத்தரங்குகள் மூலம் அறிவினை விருத்தி செய்தல்;

(உ) நிறுவனத்தின் குறிக்கோள்களின் நிலைத்திருக்கும் தன்மைக்காக யாதேனுமொரு சொத்தினை நிறுவுதல்;

(ஊ) அதன் நோக்கத்தை மேம்படுத்தல் தொடர்புடைய விடயங்கள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளை நேரடியாக அல்லது ஏனைய நபர்களுடன் இணைந்து முறையாகத் தயாரித்தல் அல்லது வழிநடாத்துதல்;

(எ) நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு தேவைப்படக் கூடியதனால் தொழில்சார் ஆலோசனைகளைக் கோரும் நபர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு செயலாற்றுகை, அதிகாரம் மற்றும் தொழிற்பாடு என்பவற்றினை நிறைவேற்றும் பணிக்காக ஆலோசனைக் குழுவொன்றினை நியமித்தல்;

(ஏ) ஊழியர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல், சேவை மாற்றங்கள் மற்றும் சேவையிலிருந்து இடைநிறுத்துதல் என்பவற்றிற்காக அதிகாரிகளை நியமித்தல், ஊழியர் களை நியமித்தல் மற்றும் அவர்களது கடமை நேரங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் என்பவற்றினை நிர்ண யித்தல்;

(ஐ) நிறுவனத்தின் நோக்கம் மற்றும் நிபந்தனைகள் என்ப வற்றின் மீது பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் பாதுகாப்புடன் அல்லது பாதுகாப்பின்றி தேவையான நிதியினை கடனாகப் பெறல் மற்றும் அங்கத்துவர்க ளுக்கு கடனாக அல்லது முற்பணமான வழங்குதல் அல்லது நிறுவனத்திற்குச் சொந்தமான எந்தவொரு சொத்தையும் நிறுனத்தின் சட்ட திட்டங்களுக்கு ஏற்பு டையவாறு கடனாக அல்லது முற்பணமாக வழங்குதல்;

(ஒ) நிறுவனத்தின் நிதியங்களை முதலீடு செய்தல், நிருவாக நிதியமொன்றினை உருவாக்குதல் மற்றும் எந்தவொரு வங்கியிலும் அல்லது நிதி நிறுவனத்திலும் நடமாடும் கணக்கு ஒன்றினை அல்லது வேறு யாதேனுமொரு கணக்கு ஒன்றினைப் பேணி வருதல்;

(ஓ) நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்காக எந்த வொரு அசைவுறும் அல்லது அசைவுறா சொத்தினை யும் விற்பனை செய்தல், அடகு வைத்தல், கைமாற்றுதல் அல்லது பரிமாற்றிக் கொள்ளல், விற்பனை செய்ய முடியாதவாறு அடகு வைத்தல், வாடகைக்கு விடல் அல்லது குத்தகைக்கு விடல், குத்தகைக்குப் பெறுவ தனை நிறுத்தி வைத்துக் கொள்ளல் என்பவற்றினை மேற்கொள்ளக் கூடியமை ;

(ஔ) எந்தவொரு பரிசுப் பொருளையும், நன்கொடையையும் அல்லது உரிமையினையும் ஏற்றுக் கொள்ளல், எந்த வொரு நிதியத்தையும் பேணி வருதல், நிறுவனத்தினால் பொருத்தமானது எனக் கருதும் பட்சத்தில் எந்தவொரு காரணத்திற்காகவும் உதவி வழங்குதல் மற்றும் சமூக பொறுப்புக்களைப் பேணி வருதல்;

(க) தேவையாயின் இடைத் தேர்வாக உதவக் கூடிய நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றினை அடைந்து கொள்வதற்காக அனைத்து சட்ட ரீதியான விடயங்களையும் மேறக்கொள்ளல் மற்றும் அதற்காக நிறுவனத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்துல்;

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நிறுவனத்தின் பணிகள் தொடர்பாக முகாமைத்துவ நிருவாகப் பணிகள், சட்டங்களை இயற்றுதல் என்பன தொடர்பான பணிககளை முகாமைத்துவ சபை ஒன்றின்கீழ் கொண்டு வருதல் (இதனகத்துப்பின்னர் "முகாமைத்துவச் சபை" என்றழைக்கப்படுகின்ற);

*(2)* முகாமைத்துவச் சபைக்கு தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுவதுடன் இச்சட்டத்தின் 10ஆவது பந்தியின் மூலம் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவச் சபைக்கு தலைவர் மற்றும் செயலாளர் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

*(3)* இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னைய நாளிலிருந்தே இந்நிறுவனத்தின் முதலாவது முகாமைத்துவச் சபைக்கு அங்கத்துவர்கள் உள்டளக்கப்படுவதுடன், அவர்கள் இச்சட்டத்தின் ஆரம்பம் முதலே முகாமைத்துவச் சபையின் பதவிகளை வகிக்கின்றனர்.

அங்கத்துவம்.

**6.** *(1)* முகாமைத்துவச் சபையினால் அங்கத்துவர்களின் பெயர் பட்டியல் ஒன்று பேணி வரப்படுவதுடன் நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களது பெயரும் குறித்த தொகுதியில் உரிய வாறு அங்கத்துவ ஏட்டில் உள்ளடக்கப்படும்.

*(2)* இச்சட்டம் ஆரம்பக்கப்படுவதற்கு முன்னைய தினத்திலிருந்தே இருந்த அனைவரும் ICCSSL இன் அங்கத்தவர்களாவதுடன், அவர்கள் நிறுவனத்தின் உரிய தொகுதியின் அங்கத்தவர்களாகக் கருதப்படுவர்.

**7**. முகாமைத்துவச் சபைக்கு முன்னளிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் அல்லது வேறு விதத்தில் ஆலோசனை வழங்குவதற்கு அல்லது சிபாரிசுகளை வழங்குவதற்கு நிறுவனத்தில் கவுன்ஸிலொன்று காணப்படும். கவுன்ஸில்.

இக்கவுன்ஸில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்களை தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் நிறுவனத்தின் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெறும்:-

(i) சபை அங்கத்தவர்கள் ; அத்துடன்

(ii) பின்வரும் அனைத்து நிறுவனங்களிலிருந்தும் வருடாந்தம் பிரதிநிதி ஒருவரை நியமித்துக் கொள்வதற்கு முகாமைத்துவச் சபையினால் அழைப்பு விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் ஒருவருட காலத்திற்கு முகாமைத்துவச் சபையினால் நியமிக்கப்படுவர்:

(அ) கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சிலிருந்து சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் ;

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர்;

(இ) கம்பனி பதிவாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் ஒருவர் ; அத்துடன்

(ஈ) இந்தப் பிரதிநிதிகள் ஒருவருட பதவிக் காலம் வீதம் ஒருவரின் பின் ஒருவர் பதவி வகிப்பதுடன், பின்வரும் பதவி வகிக்கும் நபர்களில் ஒரு பிரதிநிதி (இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவகத்தின் கணக்காளராக அல்லது ICASL இன் இலங்கையின் சான்றிதழ் பெற்ற கணக்காளர் முகாமைத்துவ சங்கத்தின் (CMA) பிரதிநிதி ஒருவர்).

பதவிப் பெயரும் மற்றும் எழுத்து மூலம் வரும் நியமனப் பெயரையும் பயன்படுத்தல்.

**8.** (1) இச்சட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதியதிகளின் பிரகாரம் சிபாரிசு செய்யப்பட்ட தகைமைகளைக் கொண்ட அனைத்து அங்கத்தவர்களும் நிறுவனத்தின் "பட்டயம் பெற்ற இணைந்த செயலாளர்கள்" என்ற பதவிப்பெயரைப் பயன் படுத்துவதற்கு தகைமைபெறுகின்றனர்.

(2) நிறுவனத்தின் அனைத்து சமகால அங்கத்தவர்களும் சமகால பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் மற்றும் FCCS எனும் எழுத்துக்கள் மூலம் குறிப்பிடப்படுகின்ற பதவிப்பெயரை வகிப்பதற்கு உரித்துடையவராவார்.

(3) நிறுவனத்தின் பங்காளி அங்கத்தவராக பதிவுசெய்துள்ள சகல அங்கத்தவர்களும் இணைந்த பட்டயம்பெற்ற செயலாளர் எனப் பதவி பெயர் அல்லது ACCS நிறுவனத்தில் பங்காளி அங்கத்தவராக பதிவுசெய்துள்ள சகல அங்கத்தவர்களும்.

பதவிப் பெயர்கள் பயன்படுத்து வதைக் கட்டுப் படுத்தல்.

**9.** (1) அண்மித்த அங்கத்தவர் ஒருவர் அல்லது சமகால அங்கத்தவர் ஒருவர் அல்லாத ஐக்கிய இராச்சியத்தின் பட்டய செயலாளர்களின் மற்றும் நிருவாகிகளின் "பட்டய செயலாளர் களான பதவிப்பெயரை அல்லது சட்டத்தின் அனுமதிபெற்ற வேறு யாதேனுமொரு விதத்தில் பிழையான வழிகாட்டலின்மூலம் சமதன்மையினைக் காட்டுகின்ற பதவிப்பெயர்களை எந்தவொரு அங்கத்தவரும் பயன்படுத்த முடியாது.

(2) சமகால அங்கத்தவர் ஒருவராக நிறுவனத்தின் பதிவு செய்யப்படாத ஒருவருக்கு சமகால பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர் பதவிப்பெயர் மற்றும் FCCS எனும் எழுத்துக்கள் மூலம் குறிப்பிடப்படுகின்ற பதவிப்பெயரை பயன்படுத்த முடியாது.

(3) அண்மித்த அங்கத்தவர் ஒருவராக நிறுவனத்தில் இல்லாத ஒருவருக்கு மற்றும் அண்மித்த பட்டயம்பெற்ற இணைந்த செய லாளர் எனும் பதவிப்பெயர் மற்றும் ACCS எனும் எழுத்துக்கள் மூலம் குறிப்பிடப்படுகின்ற பதவிப்பெயரை பயன்படுத்த முடியாது.

(4) முதலாவது துணைப்பிரிவிற்கு எதுவித எதிர்ப்பினையும் தெரிவிக்காது பட்டய செயலாளர்களின் அல்லது பட்டயம்பெற்ற இணைந்த செயலாளர்களின் சங்கத்தின் எந்தவொரு சங்கத்திற்கும் இந்நிறுவனத்தில் அங்கத்தவர்களாகும் எந்தவொரு பங்காளருக்கும் பட்டய செயலாளர்கள் எனும் பதவிப்பெயரை பயன்படுத்த முடியும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**10.** (1) பின்வரும் அனைத்து விடயங்களும் அல்லது ஒருசில விடயங்கள் தொடர்பில் காலத்திற்குக்காலம் நடாத்தப்படுகின்ற ஆண்டு பொதுக்கூட்டத்தின்போது வருகைதந்துள்ளவர்களில் மூன்றில் இரண்டு வாக்குகளுக்குக் குறையாக வாக்குகளுடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மற்றும் ஏனைய எழுத்துமூல சட்டமொன்றிற்கு இசைவுறாவகையில் சட்டம் இயற்றுதல் நிறுவனத்திற்கு சட்டரீதியானதாக அமையாது.

(அ) அங்கத்துவத்தை இராஜினாமாச் செய்தல், வெளியேற்றுதல், அகற்றுதல், சேர்த்தல் போன்ற செயற்பாடுகளுக்காக அனைத்து வகுப்புக்களையும் சேர்ந்த அங்கத்தவர்களுக்காகவும் செலுத்தவேண்டிய கட்டணங்களுக்காக நடைமுறை ஒன்றினைப் பின்பற்றுதல்;

(ஆ) முகாமைத்துவச் சபை மற்றும் கவுன்சிலுக்காக குறித்த காலத்திற்காக இராஜினாமாச் செய்தல், பதவியிலிருந்து அகற்றுதல் (செயற்குழு உறுப்பினர்) பதவியை விட்டுச் செல்லல் மற்றும் அதிகாரம், கடமை மற்றும் செயலாற்றுகை தொடர்பாக சட்டமொன்றினையும் மற்றும் வாக்கெடுப்பு ஒன்றினையும் மேற்கொள்ளல்;

(இ) நிறுவனத்தின் பல்வேறு உத்தியோகத்தர்களின் முகவர்களது மற்றும் ஊழியர்களது அதிகாரம், கடமை என்பவற்றினை நிறைவேற்றுதல், அவர்களது நியமனங்கள், பணிக்கொடை, ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக சேவையிலிருந்து அகற்றுதல் மற்றும் கடமை காலத்தை முடிவுறுத்தல் என்பன;

(ஈ) நிறுவனத்தின், முகாமைத்துவச் சபையின் மற்றும் கவுன்சிலின் அழைப்பு, கூட்டங்களை நடாத்துதல், துணைக்குழுக்கள் தொடர்பாகவும் சபை நடப்பெண் மற்றும் கூட்டங்கள் தொடர்பாகவும் செயலாற்றுதல் ;

(உ) முகாமைத்துவச் சபை மற்றும் கவுன்சிலுக்கு அங்கத்துவத்தின் தகைமையும் தகைமையின்மையும்;

(ஊ) நிறுவனத்தின் சொத்துக்களை நிருவகித்தலும் முகாமைத்துவம் செய்தலும்;

(எ) நிறுவனத்தின் சாதாரண முகாமைத்துவம் தொடர்பான பணிகள்;

(2) நிறுவனத்தின் சட்ட திருத்தங்கள், திருத்தம் செய்தல், சேர்த்தல் அல்லது இரத்துச் செய்தல் போன்றவை இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்டமொன்றை தயாரிக்கின்றவாறே மேற்கொள்ளக்கூடியதாக உள்ளமை.

(3) காலத்திற்குக்காலம் எதிர்வரும் காலங்களில் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற மற்றும் பின்பற்றப்படுகின்ற சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு அனைத்து அங்கத்தவர்களும் கடமைப்பட்டுள்ளனர்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**12.** இதிலிருந்து அல்லது இதன்பின்னர் இந்நிறுவகத்திற்கு நன்கொடைகள், பரிசில்கள், உரித்து வழங்கல்கள் என்பனமூலம் கிடைக்கின்ற அனைத்து தொகையும் அல்லது நிறுவனத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்ற அனைத்தும் நிறுவனத்தின் கணக்கிற்கு வைப்புச் செய்யப்படுகின்றவாறு வங்கி ஒன்றில் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வங்கிகளில் மற்றும் நிதி நிறுவனங்களில் நிதி நிறுவனங்களின் முகாமைத்துவச் சபைகள் தீர்மானிக்கின்றவாறு வைப்புச் செய்யப்படும்.

*கணக்கும் கணக்காய்வும்.*

**13.** ஒரு வருடம் முதல் மற்றைய வருடத்திற்கிடையே தொடர்புபடுத்தப்படாது 12 மாதங்கள் பஞ்சாங்க முறைப்படி ஒரு வருடத்திலிருந்து மற்றைய வருடம் வரையில் நிதியாண்டானது தொடர்ச்சியாக பேணிவரப்படும்:-

(1) ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் (வருமானம்-செலவினம்) என்பவற்றினை வங்கிக் கணக்குப்புத்தகத்தில் நிறுவனத்தினால் கணக்கு வைக்கப்படும்.

(2) ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் ஒருமுறை நிறுவனத்தின் கணக்குகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும்.

(3) கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் அல்லது கம்பெனி ஒன்றினால் கணக்காய்வு செய்யப்படும்.

(4) இந்தப் பந்தியில் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவர் எனக் குறிப்பிடப்படுவது, சட்டரீதியான ஏற்றுக் கொள்ளப்பட்ட தற்போது செயல்முறையில் கம்பனிகள் மற்றும் கூட்டுத்தாபன கணக்குகளை மேற்கொண்டு வருகின்ற தனிநபர் ஒருவர் அல்லது தொழில்சார் ரீதியில் பணியாற்றுகின்ற கணக்காய்வு கம்பெனி ஒன்றாகும்.

(5) முகாமைத்துவ சபையின் ஆண்டறிக்கையில் நிதியாண்டிற்குரிய கணக்குக் கூற்றினை நிறுவனத்தின் ஐந்தொகை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை என்பன உள்ளடக்கப்படும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**14.** இச்சட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னைய தினத்திலிருந்து நிலவுகின்ற அனைத்து கடன்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை நிறுவனத்தினால் செலுத்துதல் அல்லது விடுவித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் கிடைக்கவேண்டியுள்ள கடன் மற்றும் பங்களிப்புத் தொகை மற்றும் ICCSSL இற்கு அன்றைய தினத்தில் செலுத்தவேண்டியுள்ள கட்டணங்கள் என்பன சட்டத்தின் நோக்கத்திற்காக நிறுவனத்திற்கு செலுத்தப்படும்.

*சட்டத்தரணிகள், வங்கியாளர்கள், முகவர்கள்.*

**15.** முகாமைத்துவ சபையினால் சட்ட மா அதிபர்/அதிபர்கள், நிறுவன வங்கியாளர்கள் மற்றும் எந்தவொரு முகவரையும் நிறுவனத்தின் தேவைக்கேற்ப நியமிக்கப்படுவதுடன் அவ்வாறான நியமனங்கள் எந்தவொரு நேரத்திலும் இரத்துச் செய்யப்படவும் முடியும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**16.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையிலே அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்